மேனிலை இரண்டாம் ஆண்டு

கணக்குப்பதிவியல்

மாதிரி வினாத்தாள் – 3

நேரம் : 2.30 மணி மதிப்பெண்: 90

பிரிவு – I

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **(20 X 1=20)**

| | |
|---|---|
| 1 | அடக்கவிலை அல்லது_____________விலை இதில் எது குறைவோ அந்த விலையில் இறுதிச் சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.<br>அ. ஏட்டு மதிப்பு ஆ. சந்தை விலை இ. விற்பனை விலை |
| 2 | இருப்பாய்வின்படி கடனீந்தோர் ரூ.30,000. சரிக்கட்டுதலின்படி கடனீந்தோர் மீது வட்டி ஒதுக்கு 2% உருவாக்க வேண்டும் எனில் இருப்புநிலைக்குறிப்பில் காட்டப்படவேண்டிய கடனீந்தோர் தொகை<br>அ. ரூ.30,000 ஆ. ரூ.30,600 இ. ரூ. 29,400 |
| 3 | மொத்த இலாபம் மாற்றப்பட வேண்டிய கணக்கு<br>அ. முதல் கணக்கு ஆ. இலாப நட்ட கணக்கு இ. வியாபாரக் கணக்கு |
| 4 | ஒற்றைப்பதிவு முறை<br>அ. விஞ்ஞான அடிப்படையிலான முறை<br>ஆ. முழுமைபெறாத இரட்டைப் பதிவு முறை<br>இ. இரட்டைப் பதிவுமுறை |
| 5 | கடன் கொள்முதலை அறிய உதவும் கணக்கு______________<br>அ. வியாபார கணக்கு<br>ஆ. மொத்த கடனாளிகள் கணக்கு<br>இ. மொத்த கடனீந்தோர் கணக்கு |
| 6 | வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது<br>அ. கண்ணுக்குப் புலனாகாச் சொத்து |

| | |
|---|---|
| | ஆ. நிலைச் சொத்துக்கள்<br>இ. இயற்கைக் கனிம வளங்கள் |
| 7 | ரூ.10,000 மீது ஆண்டுக்கு 10% குறைந்த செல் மதிப்பு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டால் முதல் மூன்று ஆண்டுகளுக்கு நீக்கப்படும் தேய்மானத் தொகையின் மொத்தம்<br>அ. ரூ. 2107 ஆ. ரூ. 2710 இ. ரூ. 2701 |
| 8 | நிலைச்சொத்தை விற்பதால் ஏற்படும் நட்டம் தோன்றுவது<br>அ. தேய்மானம் கணக்கின் வரவுப் பக்கம்<br>ஆ. நிலைச் சொத்து கணக்கின் பற்று பக்கம்<br>இ. நிலைச்சொத்தின் கணக்கின் வரவுப் பக்கம் |
| 9 | இயக்க விகிதம் சமமாக இருக்க<br>அ. 100- இயக்க இலாப விகிதம்<br>ஆ. 100+ இயக்க இலாப விகிதம்<br>இ. இயக்க இலாப விகிதம் |
| 10 | ஒரு நிறுவனத்தின் நடப்புச் சொத்துகள் ரூ.60,000 மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூ.30,000 எனில் நடப்பு விகிதம்_______________ஆகும்.<br>அ.1:2 ஆ.1:1 இ.2:1 |
| 11 | அனைத்துச் செயல்பாட்டு விகிதங்களும்_______ ஆல் கொடுக்கப்படும்.<br>அ. விகிதாச்சாரம் ஆ. மடங்கு இ. சதவீதம் |
| 12 | ரொக்கத்திட்டப் பட்டியல் கையாள்வது<br>அ. திட்டமிடப்பட்ட ரொக்கப் பெறுதல்கள்<br>ஆ. திட்டமிடப்பட்ட ரொக்கப் செலுத்தல்கள்<br>இ. திட்டமிடப்பட்ட ரொக்கப் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் |
| 13 | கூட்டாண்மை நிறுவனத்தின் குறும எண்ணிக்கை<br>அ. ஒன்று ஆ. இரண்டு இ. ஏழு |
| 14 | முதல் மீதான வட்டி கணக்கிடப்படுவது |

| | |
|---|---|
| | அ. தொடக்க முதல் ஆ. இறுதி முதல் இ. சராசரி முதல் |
| 15 | கூட்டாளிச் சேர்க்கையின்பொழுது சொத்துக்களையும், பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்து அவற்றை_____ பதிய வேண்டியது நியாயமான செயல்முறை ஆகும்.<br>அ. அடக்க விலையில்<br>ஆ. நற்பெயர் கணக்கில்<br>இ. மறு மதிப்பீடு கணக்கில் |
| 16 | கூட்டாளிச் சேர்க்கையின்பொழுது நற்பெயர் தோற்றுவிக்கப்படுகையில் பற்றுச் செய்யப்படும் கணக்கு<br>அ. கூட்டாளிகளின் முதல் கணக்கு<br>ஆ. நற்பெயர் கணக்கு<br>இ. மறுமதீப்பீட்டு கணக்கு |
| 17 | A, B, C ஆகியோரின் இலாபப் பங்கு முறையே $2/_5, 2/_5, 1/_5$ ஆகும் . C கூட்டாண்மையிலிருந்து விலகுகிறார். அவரின் பங்கை Aயும் Cயும் சமமாகப் பெறுகின்றனர் எனக் கொண்டால் புதிய இலாபப் பகிர்வு விகிதம்<br>அ. A-1/2 & B-1/2 ஆ. A - $3/_5$ & B- $2/_5$ இ. A- $2/_5$ & B- $3/_5$ |
| 18 | ஒரு நிறுமம் ஒன்று ரூ.10 மதிப்புடைய 1,00,000 பங்குகளைப் பொதுமக்களுக்கு வெளியிட்டது. அவற்றில் 75000 பங்குகளை மட்டுமே பொதுமக்கள் வாங்க ஒப்புக்கொண்டால் அந்நிறுமத்தின் ஒப்பாத முதல் ரூ.____ ஆகும்.<br>அ. ரூ.10,00,000 ஆ. 7,50,000 இ. 2,50,000 |
| 19 | இருப்பு நிலைக்குறிப்பில் பங்கு ஒறுபிழப்பு கணக்கின் இருப்பு<br>அ. செலுத்தப்பட்ட முதலுடன் கூட்ட வேண்டும்.<br>ஆ. அங்கீகரிக்கப்பட்ட முதலுடன் கூட்ட வேண்டும்.<br>இ. செலுத்தப்பட்ட முதலில் இருந்து கழிக்க வேண்டும். |
| 20 | இருப்புநிலைக் குறிப்பில் முதலினக் காப்பு___________ பக்கம் தோன்றும்.<br>அ. சொத்துகள் ஆ. பொறுப்புகள் இ. இரண்டும் |

| | |
|---|---|
| | பிரிவு – ஆ<br>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண்21-க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். 7x2=14 |
| 21 | முன்கூட்டி பெற்ற வருமானம் என்றால் என்ன? |
| 22 | மாற்றுதல் முறை என்றால் என்ன? |
| 23 | தேய்மானத்திற்கு வரைவிலக்கணம் தருக. |
| 24 | இயக்கச் சார்பற்ற செலவினத்திற்கு எடுத்துக்காட்டுகள் இரண்டு தருக. |
| 25 | ரொக்க பெறுதல்களுக்கு உதாரணம் தருக.(ஏதேனும் 4) |
| 26 | கூட்டாளிகளின் முதல் நிலையாக உள்ளபொழுது கீழ்க்காண்பவை எங்குப் பதியப்படும்<br>i) B கொண்டுவந்த கூடுதல் முதல் ii) கூட்டாளிக்குத் தரப்படும் ஊதியம் |
| 27 | புதிய கூட்டாளியைச் சேர்க்கும்பொழுது பகிர்ந்து தரா இலாபம் மற்றும் நட்டத்தை என்ன செய்வாய்? குறிப்பேட்டுப் பதிவு தருக. |
| 28 | X, Y, Z என்ற கூட்டாளிகள் 3:2:1 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து வந்தனர். X விலகும்பொழுது நற்பெயர் கடந்த மூன்று ஆண்டுச் சராசரி இலாபங்களின் இரண்டு ஆண்டுக் கொள்முதல் எனக்கொண்டு மதிப்பிடப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ரூ.16,000, ரூ.30,000, மற்றும் ரூ.26,000 ஆகும். நற்பெயருக்குப் பதிவு தருக. |
| 29 | அழைப்பு முன் பணம் என்றால் என்ன? |
| 30 | i) அமைப்பு முறையேட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் முதல் தொகை எவ்வாறு அழைக்கப்படும்?<br>ii) 10,00,000 நேர்மைப் பங்குகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டது. பொதுமக்களிடம் இருந்து 8,55,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இச்சூழ்நிலையில் நிறுமம் பங்குகளை ஒதுக்கீடு செய்ய முடியுமா? விளக்கம் தருக. |

| | |
|---|---|
| | பிரிவு – இ<br>எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 31-க்குக் கட்டாயமாக விடையளிக்கவும். 7x3=21 |
| 31 | இயந்திரத்தின் மதிப்பு ரூ.50,000. அதன்மீது 10% தேய்மானம் கணக்கிட்டு, சரிக்கட்டுப்பதிவு, மாற்றுப்பதிவு தருக. |
| 32 | 31.03.2015 இருப்பாய்வு கீழ்க்காணும் விவரங்களைத் தருகிறது.<br>பற்று ரூ. / வரவு ரூ.<br>வங்கிக்கடன் 10% (31.3.2015) - / 20,00,000<br>வட்டி கொடுத்தது 1,20,000<br>கொடுபடவேண்டிய வட்டிக்கு வகை செய்க.<br>சரிக்கட்டுப்பதிவு தந்து இவ்விவரம் இறுதிக்கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக. |
| 33 | கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு பற்பல கடனீந்தோரின் இறுதி இருப்பைக் காண்க.<br>தொடக்க பற்பல கடனீந்தோர் 38000<br>பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் 80000<br>பெற்ற தள்ளுபடி 2000<br>வெளித்திருப்பம் 9600<br>கடன் கொள்முதல் 1,02,400 |
| 34 | தேய்மானம் நீக்க வேண்டியதன் தேவைகள் யாவை? ( எவையேனும் 3) |
| 35 | பல்வேறு பயன்பாட்டாளர்களுக்கு நிதிநிலை அறிக்கைப் பகுப்பாய்வு எவ்வாறு பயன்படுகிறது? |
| 36 | ரொக்கத்திட்டப் பட்டியல் தயாரிப்பதில் உள்ள நிலைகளை விளக்குக. |
| 37 | P, Q, R என்னும் கூட்டாளிகள் முறையே 3:2:1 என்னும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். P என்பவர் ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் ரூ.5000 திரும்ப எடுத்துள்ளார். Q என்பவர் ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் ரூ.10000 |

| | |
|---|---|
| | திரும்ப எடுத்துள்ளார். R என்பவர் 1.5.2004 அன்று ரூ.2000, 31.10.2004 அன்று ரூ.3000, 30.11.2004 அன்று ரூ.5000 எடுத்துள்ளார். 31.3.2005 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்கான அவர்களின் எடுப்புமீதான வட்டியை 10% வீதம் கணக்கிடுக. |
| 38 | ரமேஷ், ராஜேஷ், ராகேஷ் என்ற கூட்டாளிகள் 5:4:3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். ரமேஷ் விலகினார். அவரின் பங்கை முழுமையாக ராஜேஷ் எடுத்துக் கொண்டார். புதிய இலாபப் பகிர்வு விகிதம் யாது? |
| 39 | A, B, C என்ற கூட்டாளிகள் முறையே 5:3:2 என்னும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர். C என்பவர் 2005 ஏப்ரல் 1 அன்று விலகினார். அவரின் விலகலுக்குப்பின் அனைத்துச் சரிக்கட்டுதல்களும் செய்தபிறகு அவரின் முதல் கணக்கு வரவு இருப்பு ரூ. 1,35,000 ஆகக் காட்டுகிறது. பின்வருவனவற்றிற்குக் குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.<br>அ. சேரவேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டால்<br>ஆ. சேரவேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்படவில்லை என்றால்<br>இ. ரூ. 45,000 உடனடியாகவும் மீதித்தொகை பிறகு செலுத்துவதென்றால் |
| 40 | ஒரு நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதல் 40,00,000 பங்கு ஒன்றுக்கு ரூ. 10 வீதம் 4,00,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டுக் கூட்டுருவாக்கப்பட்டது. அதில் 3,80,000 பங்குகளை நிறுமம் பொதுமக்களுக்கு வெளியிட்டது. ஆனால் பொதுமக்கள் அவற்றில் 3,60,000 பங்குகளை ஒப்பினர். பங்கு ஒன்றுக்கு ரூ. 6 வீதம் இயக்குநர்கள் செலுத்தக்கோரினர். அவற்றில் 2000 பங்குகள் மீது அழைப்புப் பணம் ரூ.2 தவிர அனைத்து பணமும் பெறப்பட்டது. பலவகையான பங்கு முதலைக் கணக்கிடவும். இருப்பு நிலைக்குறிப்பில் "பங்கு முதல்" எவ்வாறு தோன்றும். |
| | பகுதி – ஈ<br>அனைத்து வினாக்களுக்கும் விடை அளிக்கவும். 7x5=35 |
| 41 | அ. 31.03.2003 அன்றைய இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ. 1,25,000 வாராக்கடன் (31.03.2003) ரூ.4000 |

சரிக்கட்டுதல்கள்

i) ரூ. 5000 வாராக்கடன் போக்கெழுதுக.

ii) கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் போக்கெழுதுக.

iii) கடனாளிகள் மீது $1^{1}/_{2}$% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக.

சரிக்கட்டுப்பதிவுகள் தந்து இவ்விரங்கள் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக்காட்டுக.

(அல்லது)

பின்வரும் செய்திகளைக்கொண்டு, உயர் இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் எனக்கொண்டு நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

அ. தொழிலின் பயன்படுத்தப்பட்ட, சராசரி முதல் ரூ. 6,00,000

ஆ. கடந்த மூன்று ஆண்டுகளில் நிறுவனத்தின் நிகர இலாபங்கள்

ரூ. 1,07,600, ரூ.90,700, ரூ.1,12,500

இ. முதல் மீது எதிர்ப்பார்க்கும் வட்டி 12%

ஈ. கூட்டாளிகள் ஊதியம் ஆண்டுக்கு ரூ.12000

42 அ) ராம், ஷ்யாம் இரு கூட்டாளிகள் இலாப நட்டத்தைச் சமமாகப் பகிர்ந்து வந்தனர். அவர்களது கணக்கேடுகள் ஒற்றைப் பதிவு முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. 31.03.2002 அன்று அவர்களது நிலை கீழ்க்காணுமாறு இருந்தது

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| ப. கடனீந்தோர் | 1,00,000 | வங்கி ரொக்கம் | 40,000 |
| கடன் | 40,000 | பற்பல கடனாளிகள் | 1,60,000 |
| முதல் | | சரக்கிருப்பு | 40,000 |
| ராம் 80000 | | | |
| ஷ்யாம் 80000 | 1,60,000 | பொறியும்,பொறித்தொகுதியும் | 60,000 |
| | 3,00,000 | | 3,00,000 |

31.03.2003 அன்று அந்நிறுவனத்தின் நிலை கீழ்க்காணுமாறு இருந்தது.

பற்பல கடனீந்தோர் 1,20,000

சரக்கிருப்பு 80,000

பொறியும், பொறித்தொகுதியும் 1,00,000

பற்பல கடனாளிகள் 1,50,000

வங்கி ரொக்கம் 60,000

பொறியும் பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் விலக்கப்பட வேண்டும்

எடுப்பு ராம் ரூ. 10,000, ஷ்யாம் ரூ. 6000

2002-03 ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

(அல்லது)

ஆ. அசோக் பிரதர்ஸ் நிறுவனம் 1.1.2000 அன்று ரூ. 5,00,000 மதிப்புள்ள இயந்திரம் ஒன்றை வாங்கியது. 1.1.2002 அன்று அவ்வியந்திரம் ரூ.4,00,000-க்கு விற்கப்பட்டது. அந்நிறுவனம் ஆண்டுதோறும் தேய்மானம் 15% நேர்க்கோட்டு முறையில் நீக்கியது. ஆண்டுதோறும் கணக்கேடுகள் மார்ச் 31 அன்று முடிக்கப் பெறுகின்றன.

இயந்திரம் கணக்கு, தேய்மானம் கணக்கு தயார் செய்க.

43 பின் வருவனவற்றைக்கொண்டு கடனாளிகள் விற்பனை விகிதத்தைக் கணக்கிடுக.

மொத்த விற்பனை ரூ. 1,75,000 ரொக்க விற்பனை ரூ.35000

விற்பனை திருப்பம் ரூ. 10,000 தொடக்கக் கடனாளிகள் ரூ. 8000

இறுதி கடனாளிகள் ரூ. 12,000

i) பின்வருவனவற்றைக்கொண்டு கடனீந்தோர் கொள்முதல் விகிதத்தைக் கணக்கிடுக.

மொத்தக் கொள்முதல் ரூ. 85,000 ரொக்கக் கொள்முதல் ரூ.20,000

கொள்முதல் திருப்பம் ரூ. 5,000 தொடக்கக் கடனீந்தோர் ரூ.25,000

இறுதிக் கடனீந்தோர் ரூ. 15000

(அல்லது)

| | |
|---|---|
| | பின்வரும் விவரங்களிலிருந்து 2006 மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியலைத் தயாரிக்க.<br><br>மாதம் / கடன் கொள்முதல் / கடன் விற்பனை / நிர்வாக மற்றும் விற்பனைச் செலவுகள்<br>ஜனவரி 75,000 / 1,50,000 / 1,20,000<br>பிப்ரவரி 1,00,000 / 1,35,000 / 1,35,000<br>மார்ச் 85,000 / 1,75,000 / 65,000<br>ஏப்ரல் 1,25,000 / 1,20,000 / 70,000<br><br><u>கூடுதல் தகவல்கள்</u><br>i) 01.03.2006இல் எதிர்நோக்கும் ரொக்க இருப்பு ரூ.80,000<br>ii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் இரண்டு மாதங்கள்<br>iii) வாடிக்கையாளருக்கு அளித்த கடனின் காலம் ஒரு மாதம்<br>iv) செலவுகள் அம்மாதத்திலேயே செலுத்தப்பட வேண்டும்<br>v) ஏப்ரலில் ரூ.25,000 நிலைச் சொத்து விற்கப்பட்டது. |
| 44 | அ. சீதா, கீதா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர். 31.03.2005 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு பின்வருமாறு<br><br>பொறுப்புகள் ரூ. / சொத்துக்கள் ரூ.<br>பற்பல கடனீந்தோர் 80,000 / வங்கி 10,000<br>செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு 20,000 / பற்பல கடனாளிகள் 30,000<br>/ சரக்கிருப்பு 20,000<br>முதல் கணக்குகள் / இயந்திரம் 40,000<br>சீதா 40,000 / நிலமும்,<br>கீதா 30,000 <u>70,000</u> / கட்டடமும் <u>70,000</u><br>1,70,000 / 1,70,000<br><br>1.4.2005 அன்று லதா என்பவரைப் பின்வரும் பகிர்வுகளுக்குச் சேர்த்துக்கொள்ள |

முடிவு செய்தனர்.

அ. லதா ரூ. 30,000 முதல் கொண்டு வருவது

ஆ. ஏடுகளில் நற்பெயர் ரூ. 20,000 எனத் தோற்றுவிப்பது

இ. நிலம் கட்டடத்தை 10% மதிப்பேற்றம் செய்வது

ஈ. சரக்கிருப்பை ரூ. 3000 குறைப்பது

உ. கொடுபடாப் பொறுப்பு ரூ. 2000 உருவாக்குவது

மறுமதீப்பீட்டுக் கணக்கு மற்றும் முதல் கணக்குகள் தயாரிக்கவும்.

(அல்லது)

ஆ.GG வரையறு நிறுமம் ரூ. 10 வீதம், 50,000 நேர்மைப் பங்குகளை வெளியிட்டது. குறிப்பேட்டுப் பதிவில் விடுபட்ட தொகையினையும் அதன் கணக்குகளையும் கண்டுபிடித்து முழுமையான குறிப்பேட்டில் எழுதவும்.

| தேதி | விவரம் | பே.எண் | பற்று | வரவு |
|---|---|---|---|---|
| 2015<br>ஜனவரி<br>10 | _______ ப<br>_________<br>(பங்கு ஒன்றுக்கு ரூ. 3 வீதம் 70,000 பங்குகள் விண்ணப்பத்தொகை பெற்றது) | | ? | <br>? |
| ஜனவரி<br>16 | நேர்மைப் பங்கு விண்ணப்பக் க/கு ப<br>_____<br>_____<br>(பங்கு விண்ணப்பத்தொகை மற்றும் மிகுதியாக பெற்ற 20,000 பங்குகளுக்கான விண்ணப்தொகை திருப்பிச் செலுத்தப்பட்டது)<br>_____________-_____________ | | ? | <br>?<br>? |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஜனவரி 31 | விவரம்<br>_______ ப<br>_________<br>பங்குகள் மீது ஒதுக்கீட்டுத்தொகை பெற வேண்டியது ரூ. 4 வீதம் பங்கு ஒன்றுக்கு | | | |
| | பிப்ரவரி 20 | விவரம்<br>_______ ப<br>_________<br>(ஒதுக்கீட்டுப் பணம் பெற்றது) | | | |
| | ஏப்ரல் 1 | விவரம்<br>_______ ப<br>_________<br>(முதல் அழைப்புத்தொகை பெற்றது) | | | |
| | ஏப்ரல் 2 | விவரம்<br>_______ ப<br>_________<br>(49500 பங்குகள் மீதான முதல் அழைப்புத்தொகை பெற்றது) | | | |

| | |
|---|---|
| 45 | அ. அஸ்வின் வரையறு நிறுமம் ரூ. 10 வீதம் 1,70,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது. அப்பங்குகள் பின்வருமாறு செலுத்தப்படவேண்டும்<br>விண்ணப்பத்தின்போது ரூ.3<br>ஒதுக்கீட்டின்போது ரூ.4 (ரூ. 1 தள்ளுபடி செய்த பிறகு)<br>முதல் மற்றும் இறுதி அழைப்பின்போது ரூ.2<br>பொதுமக்கள் 1,60,000 பங்குகளுக்கு விண்ணப்பித்தனர். பங்குகள் அனைத்தும் ஒதுக்கீடு செய்யப்பட்டன. பெறவேண்டிய தொகைகள் அனைத்தும் முழுமையாகப் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக. |

(அல்லது)

ஆ. ஒரு நிறுவனம் 1.1.2002 அன்று ரூ. 5,00,000 மதிப்புகள் இயந்திரம் ஒன்றை வாங்கியது. 2003 டிசம்பர் 31 அன்று அவ்வியந்திரம் ரூ.3,90,000க்கு விற்கப்பட்டது. அந்நிறுவனம் ஆண்டுதோறும் தேய்மானம் 10% குறைந்த செல் இருப்பு முறையில் நீக்கியது. ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31இல் கணக்குகள் முடிக்கப்பெறுகின்றன. இயந்திரக்கணக்கு மற்றும் தேய்மானம் கணக்கு தயார் செய்க.

46 அ) பின்வரும் விவரங்களிலிருந்து 2006 ஏப்ரல், மே, ஜுன் மாதங்களுக்கான ரொக்கத்திட்டப் பட்டியலைத் தயாரிக்க

| மாதம் | விற்பனை ரூ. | கொள்முதல் ரூ. | செலவுகள் ரூ. |
|---|---|---|---|
| மார்ச் 2006 | 4,00,000 | 3,00,000 | 40,000 |
| ஏப்ரல் 2006 | 5,00,000 | 5,00,000 | 60,000 |
| மே 2006 | 6,00,000 | 3,00,000 | 70,000 |
| ஜுன் | 8,00,000 | 5,00,000 | 90,000 |

i) அனைத்து விற்பனையும் ரொக்க விற்பனையாகும்.

ii) செலவுகள் 1 மாதம் கடந்தபின் செலுத்தப்படுகிறது.

iii) சரக்களித்தோர் அனுமதித்த கடனின் காலம் 1 மாதம்.

iv) 01.04.2006இல் தொடக்க ரொக்க இருப்பு ரூ. 6000

(அல்லது)

ஆ) திரு. அருள் என்பவர் ஒற்றைப்பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். 01.04.2005 அன்று அவருடைய முதல் ரூ. 5,00,000.

**கூடுதல் விவரம்**

| | |
|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2 ,50,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 50,000 |
| ரொக்க விற்பனை | 2,00,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 60,000 |
| பற்பல கடனாளிகள் தொடக்க இருப்பு | 40,000 |

| | |
|---|---|
| பற்பல கடனீந்தோர் தொடக்க இருப்பு | 1,83,000 |
| வியாபாரச் செலவுகள் | 1,20,800 |
| நிலம், கட்டடம்(31.03.2006) | 4,00,000 |
| அறைகலன் (31.03.2006) | 7,200 |
| இறுதிச் சரக்கிருப்பு | 2,60,000 |
| பற்பல கடனாளிகள் இறுதி இருப்பு | 80,000 |
| பற்பல கடனீந்தோர் இறுதி இருப்பு | 2,00,000 |
| இறுதி ரொக்க இருப்பு | 55,000 |

2006 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்ட க\கு, அந்நாளைய இருப்புநிலைக்குறிப்பு தயார் செய்க.

47 அ. கீழே தரப்பட்டுள்ள திரு. இம்ரான் அவர்களின் 2005 மார்ச் 31ஆம் நாளைய இருப்பாய்விலிருந்து வியாபார, இலாப நட்ட க\கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு தயார் செய்க.

| விவரம் | பற்று (ரூ.) | வரவு(ரூ.) |
|---|---|---|
| எடுப்பு மற்றும் முதல் | 8000 | 1,50,000 |
| வங்கி மேல் வரைப்பற்று | - | 25,200 |
| கொள்முதல் மற்றும் விற்பனை | 6,60,000 | 9,00,000 |
| அறைகலன் | 30,600 | - |
| புனையுரிமை | 1,20,000 | - |
| கடனாளிகள் மற்றும் கடனீந்தோர் | 1,00,000 | 79,800 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,32,000 | - |
| தள்ளுபடி | - | 2,400 |
| எரிபொருள் மற்றும் வாயு | 4,000 | - |
| கூலி | 20,000 | - |
| சம்பளம் | 54,000 | - |
| விளம்பரம் | 13,200 | - |

| | | |
|---|---|---|
| கொள்முதல் மீதான வண்டிச்சத்தம் | 10,800 | - |
| விற்பனை மீதான வண்டிச்சத்தம் | 800 | - |
| வருமான வரி | 4,000 | |
| | 11,57,400 | 11,57,400 |

<u>சரிக்கட்டுதல்கள்</u>

1. இறுதிச் சரக்கிருப்பு ரூ. 1,20,000
2. கடனீந்தோர் மீதான தள்ளுபடி ஒதுக்கு 2% உருவாக்குக.
3. புனையுரிமை மீது 10% தேய்மானம் நீக்கப்படவேண்டும்

(அல்லது)

லலிதா, ஜோதி, கனகா என்ற கூட்டாளிகள் முறையே 3:2:3 என்னும் விகிதத்தில் இலாப நட்டங்கள் பகிர்ந்து வந்தனர். அவர்களுடைய 2003 டிசம்பர் 31ஆம் நாளைய இருப்பு நிலைக்குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 62,500 | கையிருப்பு ரொக்கம் | 750 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 32,000 | வங்கி ரொக்கம் | 2,04,500 |
| இலாப நட்டக் க\கு | 22,000 | கடனாளிகள் | 89,000 |
| கொடுபடாச் செலவுகள் | 500 | சரக்கிருப்பு<br>அறைகலன் | 1,11,500<br>17500 |
| முதல்<br>லலிதா 2,00,000<br>ஜோதி 1,25,000<br>கனகா 1,50,000 | 4,75,000 | பொறியும் பொறித் தொகுதியும்<br>கட்டடம் | 48,750<br>120000 |
| | 5,92,000 | | 5,92,000 |

| | |
|---|---|
| | பின்வரும் பகிர்வுகளில் 2004 ஜனவரி 1ஆம் நாள் லலிதா என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார்.<br>அ. நற்பெயர் ரூ. 30,000 என மதிப்பிடப்பட்டது.<br>ஆ. கீழ்க்காணுமாறு சொத்துகள் மதிப்பிடப்பட்டுள்ளது.<br>சரக்கிருப்பு ரூ. 1,00,000 அறைகலன் ரூ. 15,000<br>பொறியும் பொறித்தொகுதியும் ரூ. 45,000<br>கட்டடம் ரூ. 1,00,000<br>இ) ஐயக்கடன் ஒதுக்கு ரூ. 4,250 உருவாக்கப்பட்டது<br>ஈ. லலிதாவுக்கு சேரவேண்டிய தொகை உடனடியாகச் செலுத்தப்பட்டது<br>மறுமதிப்பீட்டுக் கணக்கு மற்றும் முதல் கணக்குகள் தயார் செய்க. |